தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

திருவள்ளுவர் ஆண்டு 2042 - வைகாசி 23

2011 ஜூன் 6, திங்கட்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. டி. ஜெயக்குமார்** *அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"நெருநல் உளன்ஒருவன் இன்றுஇல்லை என்னும்
பெருமை உடைத்துஇவ் வுலகு"

நேற்று இருந்தவர் ஒருவர், இன்று இல்லாமல் இறந்து போனார் என்று சொல்லப்படும் நிலையாமை ஆகிய பெருமை உடையது இவ்வுலகம்.

1. இரங்கற்குறிப்புகள்

முன்னாள் உறுப்பினர்கள் மறைவு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை முன்னாள் உறுப்பினர்களான திரு. அ. பாலுச்சாமி அவர்கள் 8-2-2011 அன்றும், திரு. தா. வேடியப்பன் அவர்கள் 2-3-2011 அன்றும், திரு. வி.கே. இராஜூ அவர்கள் 12-3-2011 அன்றும், திரு. கி. பார்த்தசாரதி அவர்கள் 15-3-2011 அன்றும், திரு. சீ. நல்லசாமி அவர்கள் 15-3-2011 அன்றும், திரு. மு.ரா. சௌந்திரராஜன் அவர்கள் 24-4-2011 அன்றும் மற்றும் திரு. மு. சின்னக்குழந்தை அவர்கள் 18-5-2011 அன்றும் மறைவுற்ற செய்தியினைப் பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்.*

திரு. அ. பாலுச்சாமி அவர்கள் நிலக்கோட்டை தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்கு இரண்டு முறை தேர்ந்தெடுக்கப்பட்டு 1977 முதல் 1980 வரையிலும் மற்றும் 1985 முதல் 1988 வரையிலும், சமயநல்லூர் தொகுதியிலிருந்து

தேர்ந்தெடுக்கப்பட்டு 1980 முதல் 1984 வரையிலும் சிறப்புறப் பணியாற்றியுள்ளார்கள்.

திரு. தா. வேடியப்பன் அவர்கள் போளூர் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு 1991 முதல் 1996 வரை திறம்படப் பணியாற்றியுள்ளார்கள்.

திரு. வி.கே. இராஜு அவர்கள் அரக்கோணம் தொகுதியிலிருந்து மூன்று முறை தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு 1977 முதல் 1980 வரையிலும், 1985 முதல் 1986 வரையிலும் மற்றும் 1989 முதல் 1991 வரையிலும் போற்றத்தக்கவகையில் பணியாற்றியுள்ளார்கள்.

திரு. கி. பார்த்தசாரதி அவர்கள் கள்ளக்குறிச்சி தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு 1953 முதல் 1957 வரையிலும், சங்கராபுரம் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு 1962 முதல் 1967 வரையிலும் சீரிய முறையில் பணியாற்றியுள்ளார்கள். மேலும், இவர் 31-3-1962 முதல் 28-2-1967 வரை சட்டமன்றப் பேரவைத் துணைத் தலைவராகவும் பணியாற்றியுள்ளார்.

திரு. சீ. நல்லசாமி அவர்கள் கரூர் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு 1971 முதல் 1976 வரை சிறப்பாகப் பணியாற்றியுள்ளார்கள்.

திரு. மு.ரா. சௌந்திரராஜன் அவர்கள் பவானி தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு 1977 முதல் 1980 வரை நல்ல முறையில் பணியாற்றியுள்ளார்கள்.

திரு. மு. சின்னக்குழந்தை அவர்கள் ஆரணி தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு 1985 முதல் 1988 வரையிலும், பெரணமல்லூர் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு 1989 முதல் 1991 வரையிலும் சிறப்பான முறையில் பணியாற்றியுள்ளார்கள்.

இம்முன்னாள் உறுப்பினர்களது மறைவால் அவர்களைப் பிரிந்து வருந்தும் அவர்தம் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் இப்பேரவையின் சார்பிலும், என் சார்பிலும் தெரிவித்துக்கொள்கிறேன்.

2011 ஜூன் 6] [பேரவைத் தலைவர்]

மறைந்த இப்பெருந்தகைகளுக்கு மரியாதை செலுத்தும்வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று, இரண்டு மணித்துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று, இரண்டு மணித்துளிகள் அமைதி காத்தனர்.)

2. இரங்கல் தீர்மானம்

மாண்புமிகு திரு. என். மரியம்பிச்சை, சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள் மறைவு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு திரு என். மரியம்பிச்சை, சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள் மறைவு குறித்த இரங்கல் தீர்மானம்.*

"திருச்சி மாவட்டம், திருச்சி மேற்கு தொகுதியிலிருந்து பதினான்காவது தமிழக சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு சுற்றுச்சூழல் துறை அமைச்சராகப் பதவியேற்ற திரு. என். மரியம்பிச்சை அவர்கள் 23-5-2011 அன்று எதிர்பாராதவிதமாக சாலை விபத்தில் மறைவுற்ற செய்தி அறிந்து இப்பேரவை அதிர்ச்சியும் ஆற்றொணாத் துயரமும் கொள்கிறது.

முற்பகல் 10-05

மறைந்த திரு. என். மரியம்பிச்சை அவர்கள் சாதாரண தொண்டனாக இருந்து பல்வேறு பொறுப்புகள் வகித்தவர். கட்சித் தலைமையின்மீது அன்பும் விசுவாசமும் கொண்டு ஆரம்ப காலம் முதல் கட்சிப் பணிகளில் முழுமையாகத் தன்னை ஈடுபடுத்திக்கொண்டு திறம்படப் பணியாற்றியுள்ளார். பொது வாழ்வில் அடக்கமுடன் சீரிய முறையில் பணியாற்றிய இவர், திருச்சிராப்பள்ளி மாநகராட்சி மாமன்ற உறுப்பினராக மூன்று முறை செவ்வனே பணியாற்றி, அனைவரிடத்திலும் நட்புறவோடு பழகி அனைத்துத் தரப்பினரின் பாராட்டையும் பெற்றவர். ஆற்றல் படைத்த, துடிப்பு மிக்க, செயல் வீரராகப் பணியாற்றி வந்த இவரது இழப்பு ஈடுசெய்ய முடியாத ஒன்றாகும்.

அன்னாரது மறைவால் அவரை இழந்து வருந்தும் அவர்தம் குடும்பத்தினருக்கு இப்பேரவை ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக்கொள்கிறது."